தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை
காக்கும் பணியில் நூறு ஆண்டுகள் (1908-2008)
**WE SERVE TO SAVE**

பள்ளிக் கல்வி இயக்ககம் 29 OCT 2021 சென்னை-6

அனுப்புநர்

இயக்குநர்,
தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை,
எண்.17, ருக்மணி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை - 8.

பெறுநர்

1). பள்ளிக் கல்வி இயக்குநர்,
கல்லூரி சாலை,
சென்னை- 600 008.
2). தொடக்க கல்வி இயக்குநர்,
கல்லூரி சாலை, சென்னை- 6.

ந.க.எண்.3467/இ2/2021 நாள்.26.10.2021

அய்யா,

பொருள்: தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை - இயக்ககம் - தீபாவளி - 2021 தீபாவளி பண்டிகையின்போது - தீப்பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தல் - தீப்பாதுகாப்பு குறித்து பிரச்சாரம் செய்தல் - தொடர்பாக.

********

04.11.2021 அன்று தீபாவளி பண்டிகை பொதுமக்களால் கொண்டாடப்பட உள்ளது. இத்தகைய நன்னாளில் சில இடங்களில் மக்கள் கவனக்குறைவாக பட்டாசு வெடிப்பதால் தீ விபத்து ஏற்பட்டு குடிசைப்பகுகளில் உயிர் மற்றும் பொருட்சேதங்கள் ஏற்படுகிறது. மேலும் சிறார்களுக்கு தீக்காயங்களும் சில நேரங்களில் பார்வை இழப்பும் ஏற்படுகிறது. இத்தகைய நிகழ்வுகளை தவிர்ப்பதும், தடுப்பதும் நமது முக்கிய கடமையாகும்.

2) தீபாவளி நன்னாளில் சிறியவர்களும் பெரியவர்களும் பட்டாசு பயன்படுத்தும் வேளையில் முறையாக கவனமாக பட்டாசுகளை வெடிக்க வேண்டும், தவறுதல் காரணமாக தீ விபத்துக்கள் ஏற்பட ஏதுவாக உள்ளது. எனவே விபத்துக்கள் அற்ற தீபாவளி கொண்டாட பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர் அறியுமாறு செயல்முறை விளக்கம் செய்திட கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

(1). பட்டாசுகளை கொளுத்தும்போது தளர்வான ஆடைகள் உடுத்துவதை தவிருங்கள், டெரிகாட்டன் / டெரிலின் ஆகிய எளிதில் பற்றக்கூடிய ஆடைகளை அணியக்கூடாது.

(2). பட்டாசுகள் கொளுத்துமிடத்திற்கு அருகாமையில் ஒரு வாளி தண்ணீர் வைத்துக் கொள்ளுங்கள்.

(3). பட்டாசுகளை கொளுத்தி, கையில் வைத்துக்கொண்டோ அல்லது உடலுக்கு அருகாமையிலோ வெடிக்க வேண்டாம், மாறாக பாதுகாப்பான தொலைவில் வைத்தே வெடியுங்கள்.

(4). மூடிய பெட்டிகளில் / பாட்டில்களில் பட்டாசுகளை உள்ளிட்டு கொளுத்தி வெடிக்க செய்யாதீர்கள்.

(5). ராக்கெட்டுகளை வெட்ட வெளியில் குடிசைகள் இல்லாத பகுதிகளில் மட்டுமே செலுத்துங்கள்.

(6). பட்டாசுகளை கூட்டமான பகுதிகளிலும், தெருக்களிலும் மற்றும் சாலைகளிலும் வெடிக்காதீர்கள்.

(7). பட்டாசுகளை விற்பனை செய்யும் கடைக்கு முன்னரோ அருகிலோ வெடிக்காதீர்கள்.

(8). குழந்தைகள் பட்டாசுகளை பெற்றோர்களின் முன்னிலையில் அவர்களது பாதுகாப்பின் கீழ் வெடிக்க வேண்டும்.

(9). நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவ மனைகளுக்கு அருகாமையில் பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.

(10). விலங்குகளை துன்புறுத்தும் வகையிலும், அவைகள் பயப்படும் வகையிலும் பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.

(11). பெட்ரோல் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு அருகாமையில் பட்டாசுகளை வெடிக்கவோ, கொளுத்தவோ செய்யாதீர்கள்.

(12). இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரை பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.

(13). அதிக சப்தமுள்ள பட்டாசுகளை வெடிக்க வேண்டாம். ஏனெனில் அது உடலையும் மனநிலையையும் பாதிக்கும் காதுகள் செவிடாகக் கூடும். ஒரு நாள் கொண்டாட்டத்திற்காக வாழ்நாள் முழுவதும் துன்பப்படவேண்டாம்.

(3). கடந்த ஆண்டில் மாணவ, மாணவிகள் மனதில் பாதுகாப்பு முறைகள் பற்றிய சிந்தனை செயல்பாடுகள் சிறக்கும் வகையில்.

(அ). மாணவ மாணவிகளுக்கு பள்ளிகளில் விழிப்புணர்வு செயல்முறை காட்சிகள் செய்தும்,

(ஆ). ஆசிரியர் பெருமக்களுக்கு அடிப்படை தீ விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய வகுப்பும் இத்துறை அலுவலர்களால் நடத்தப்பட்டும் சென்ற ஆண்டில் பெருந்தீ விபத்துக்கள் அதிகம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

(4). சென்ற ஆண்டைப்போன்றே இவ்வாண்டும் கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்றி, செயல்படுத்தி, விபத்தற்ற தீபாவளியாக கொண்டாடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

(அ). ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத் தலைவர்கள் இருவார காலத்திற்கு நாள்தோறும் பள்ளியின் காலை இறை வணக்கத்திற்கு பிறகோ அல்லது அணி திரளும்போதோ தோராயமாக 5 நிமிடங்களுக்கு தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக தீப்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவுரையாற்றுவது.

(ஆ). மாணவர்களிடையே தீபாவளி பண்டிகையினை விபத்தில்லாத வகையில் எவ்வாறு கொண்டாடுவது என்பது குறித்து அவர்களது அறிவுக்கூர்மையை சோதித்து பார்த்தல்.

(இ). ஒரு குறிப்பிட்ட இடைவெளி தருணத்தில் 5-லிருந்து 10 நிமிடம் தீப்பாதுகாப்பு செய்திகள் குறித்து சிலேடை நிகழ்ச்சி நடத்துதல்.

(ஈ). தீப்பாதுகாப்பு குறித்து வரைபட போட்டி நடத்தி சிறந்ததாகத் தேர்ந்தேடுக்கப்படும் வரைபடத்திற்கு பரிசளித்தல்.

(உ). குடிசைப் பகுதிகள் ஏதேனும் பள்ளி நிர்வாகத்தின் கீழ் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்ட செயலபாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தால், அவர்களிடையே தீப்பாதுகாப்பு குறித்தான சிலேடை நிகழ்ச்சி நடத்துதல்.

(எ). வெடிக்காத பட்டாசுகளை குனிந்து பரிசோதிப்பதை தவிர்த்தல்.

(ஏ) விவரம் அறியாத இளஞ்சிறார்களை வெடிகளைக் கொளுத்த அனுமதியாதிருத்தல்.

(5) மேலும், இத்துறையைச் சார்ந்தவர்கள், அனைத்து பள்ளிகளுக்கும் வருகை புரிந்து மேற்படி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது, என்பதோ அல்லது அறிவுரை வழங்குவது என்பதோ இயலாத ஒன்றாகும். ஆயினும், இது தொடர்பாக எங்களுக்கு வரும் கோரிக்கைகள் உடனுக்குடன் பரிசீலித்து ஐயப்பாடின்றி எங்களால் இயன்றவரை செய்வோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, பள்ளி நிர்வாகத்தினரே அவர்களது சொந்த ஏற்பாட்டினில் அவர்களுக்குள்ள வழிமுறைகளின்படி மேற்படிதிட்டத்தினை அவர்களே செயல்படுத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் தீபாவளி பண்டிகையின்போது இளஞ்சிறார்கள் தீ விபத்து தடுப்பு பாதுகாப்பு விதிகளை அனுசரிக்க நினைக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து அவர்களை பாதுகாத்துக் கொள்ளவும், பொதுமக்களின் உயிர்களையும் உடமைகளையும் பட்டாசு தீ விபத்துகளிலிருந்து காப்பாற்றிட ஒரு வழியாக அமையும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) தீபாவளி சமயத்தில் ஒரு வார காலத்திற்கு மேற்படி நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தீ பாதுகாப்பு குறித்து பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தான பல நல்ல கருத்துக்களை மனதில் நன்கு பதியவைத்து 04.11.2021 அன்று கொண்டாடப்படவுள்ள தீபாவளியின்போது குழந்தைகள், மாணவ மாணவிகள் மறந்திடாமல் இந்த பாதுகாப்பு வழிமுறைகளை அவர்களே செயல்படுத்திட ஏதுவாக இருக்குமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, பள்ளி நிர்வாகத்தினரே மேற்படி நிகழ்ச்சிகளை குழந்தைகள், மாணவ மாணவிகள் அறிந்து கொள்ளத்தக்க வகையில், அவர்களுக்குரிய உத்திகளை கையாளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாணவ, மாணவியர் இவ்வாண்டு விபத்தில்லாமல் தீபாவளி கொண்டாட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(7) மேற்குறித்த செயல் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

27/10/21

இயக்குநருக்காக
தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் துறை,
தமிழ்நாடு.

நகல்: இணை இயக்குநர், தீயணைப்பு மீட்புப் பணிகள்,
வடமண்டலம், சென்னை - 8.
(ஒரு பொறுப்பான அலுவலரை பள்ளி கல்வி இயக்குநர்
மற்றும் தொடக்க கல்வி இயக்குநர் ஆகியோர்களை
நேரில் சந்தித்து, இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தீப்பாதுகாப்பு
வழிமுறைகளை அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களின்
கவனத்திற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,
மேற்படி அலுவலர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தான
அறிக்கைப் பெற்று அனுப்பி வைக்குமாறும் கோரப்படுகிறார்.)

நகல்: இணை இயக்குநர், தீயணைப்பு மீட்புப் பணிகள்,
மேற்கு மண்டலம், கோவை. மற்றும் மாநிலப்பயிற்சி மையம், தாம்பரம்.

நகல்: அனைத்து துணை இயக்குநர்கள், தீயணைப்பு மீட்புப் பணிகள்,
(அனைத்து பள்ளிகளிலும்,விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட உரிய
நடவடிக்கை எடுக்க கோரப்படுகிறார்கள்.)

**End.R.C.No: 056577/ M/ S1 / 2021, நாள்: 02.11.2021**

**(நகல்)** மேற்காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அனைத்து வகைப் பள்ளி மாணவ மாணவியர்களும் தீபாவளி சமயத்தில், மேற்படி நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தீ பாதுகாப்பு குறித்து பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தான பல நல்ல கருத்துக்களை மனதில் நன்கு பதிய வைத்து **04.11.2021** அன்று கொண்டாடப்படவுள்ள தீபாவளியின்போது மாணவ / மாணவிகள் பாதுகாப்பு வழிமுறைகளை அவர்களே செயல்படுத்திட ஏதுவாக உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து வகைப் பள்ளி தலைமைஆசிரியர்களுக்கும் அறிவுறுத்த அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவிக்கலாகிறது.

3.11.21

**இணை இயக்குநர்**

**(நாட்டு நலப்பணித் திட்டம்)**

02/11/21

**பெறுநர்**

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்